## நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில் புதிய வாக்காளர் பெயர் சேர்ப்பு முகாம்

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வாக்காளர் விழிப்புணர்வு மையத்தின் சார்பில் 02.12.2022 அன்று புதிய வாக்காளர் பெயர் சேர்ப்பு முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளராக நாமக்கல் வட்டாட்சியர் சி. சக்திவேல் கலந்து கொண்டார். ஜனநாயக நாட்டில் வாக்களிப்பது என்பது ஒவ்வொருவரின் கடமையாகும். ஒரு நல்ல மக்களாட்சி அமைய வாக்குரிமை கொண்ட அனைவரும் வாக்களிக்க வேண்டும். 31.12.2004- அல்லது அதற்கு முன்பு பிறந்த அனைவரும் தங்களுடைய பெயரினை படிவம் 6 – னை பூர்த்தி செய்து வாக்காளர் பெயர் பட்டியலில் இடம் பெறலாம் என்று கூறினார்.

படிவம் 6 மற்றும் அதன் தொடர்புடைய இணைப்பு ஆவணங்களான பிறந்த தேதியினை குறிப்பிடும் 10 அல்லது 12-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அல்லது மாற்றுச் சான்றிதழ் நகல், ஆதார் அட்டை நகல், குடும்ப உறுப்பினர்கள் தாய், தந்தை, சகோதரர், சகோதரி அல்லது குடும்பத்தில் உள்ள யாராவது ஒருவரது வாக்காளர் அட்டை நகல் இவற்றோடு வண்ணப்புகைப்படம் இவற்றினைக் கொண்டு வாக்காளர் புதிய பெயர் பட்டியலில் இடம் பெறலாம் என்றார்.

நாமக்கல் தேர்தல் வருவாய் ஆய்வாளர் கே. பிரகாஷ் படிவம் 6-னை எவ்வாறு பூர்த்தி செய்வது என்று எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்வில் நாமக்கல் மாவட்டத்தினை சார்ந்த சட்டசபை தொகுதிகளான நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு, பரமத்தி-வேலூர், சேந்தமங்கலம், கரூர் மாவட்ட சட்டசபை தொகுதிகளான கரூர், கிருஷ்ணராயபுரம், அரவக்குறிச்சி மற்றும் திருச்சி மாவட்ட சட்டசபை தொகுதிகளான முசிறி, துறையூர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த 60-க்கும் மேற்பட்ட டிரினிடி கல்லூரி மாணவியர் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஜனநாயக கடமையாற்ற உள்ள எதிர்கால வாக்காளர்களை கல்லூரி தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன், செயலர் கே. நல்லுசாமி, செயல் இயக்குநர் அருணா செல்வராஜ், முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன், இயக்குநர் உயர்கல்வி அரசுபரமேசுவரன், நிர்வாக அலுவலர் என். எஸ். செந்தில்குமார் மற்றும் கல்லூரி வாக்காளர் விழிப்புணர்வு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆர். ஏ. அனிதா ஆகியோர் பாராட்டினர்.

3.12.2022

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.